SINGAPORE – CAMBRIDGE
General Certificate of Education Ordinary Level

**உயர்தமிழ்** **1147/1**

தாள் 1

**HIGHER TAMIL** **SPECIMEN PAPER**

Paper 1 *With effect from 2024 examination*

**2 hours**

Additional Materials: Main Answer Booklet

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்**

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் மண்டபத்திலிருந்தோ அறையிலிருந்தோ வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.

4 அங்கீகரிக்கப்பட்ட தமிழ் அகராதிகளுள் ஒன்றினைப் பயன்படுத்தலாம்.



Singapore Examinations and Assessment Board

©MOE

'அ' பிரிவில் ஒரு வினாவுக்கும் 'ஆ' பிரிவில் ஒரு வினாவுக்குமாக மொத்தம் <u>இரண்டு</u> வினாக்களுக்கு விடையளிக்கவும்.

## 'அ' பிரிவு (மின்னஞ்சல் / கருத்துக்களம்)

**பின்வருவனவற்றுள் ஏதேனும் <u>ஒன்றுக்கு</u> மட்டும் 130 சொற்களுக்குக் குறையாமல் பதில் எழுதவும்.** (20 மதிப்பெண்கள்)

**1** பின்வரும் தகவலைப் படித்து அதற்கு மின்னஞ்சல்வழியே பதில் எழுதவும்.

கெப்பல் வசிப்போர் குழு நெகிழிப்பைகளின் பயன்பாட்டைக் குறைக்க ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அத்திட்டத்தின்படி அக்கம்பக்கக் கடைகளில் பொருள் வாங்குவோர் இனி நெகிழிப்பைகளின் பயன்பாட்டுக்கெனத் தனிக்கட்டணம் செலுத்த வேண்டும். அத்திட்டத்திற்குக் கடைக்காரர்கள் ஆதரவு தெரிவித்திருந்தாலும் குடியிருப்பாளர்களுள் சிலர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

எதிர்ப்புத் தெரிவித்த குடியிருப்பாளர்களைப் பிரதிநிதித்துத் திரு எழிலன் என்பவர் அத்திட்டத்தை ஆதரிக்காததற்கான காரணங்களை வசிப்போர் குழுவுக்கு மின்னஞ்சல் வழியாகத் தெரிவித்துள்ளார். மறுபயனீட்டுப்பைகளை உடனெடுத்துச் செல்லாத வேளைகளில் பொருள்கள் வாங்குவோர் அத்திட்டத்தால் சிரமத்திற்குள்ளாவர் என்பது அக்காரணங்களுள் ஒன்றாகும்.

வசிப்போர் குழுவின் தலைவர் என்னும் முறையில் நீ அத்திட்டத்தின் அவசியம் குறித்துத் திரு எழிலனுக்கு மின்னஞ்சல் வழியாகப் பதில் எழுதவும். அத்திட்டத்தால் குடியிருப்பாளர்கள் எதிர்நோக்கக்கூடிய சிரமங்களைச் சமாளிப்பதற்கு வசிப்போர் குழு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளைப் பற்றியும் விளக்கவும்.

**2** மக்கள் தங்கள் வீடுகளுக்கு வெளியே பொருள்களைக் குவித்து வைப்பதால் அவை நடைபாதையைப் பயன்படுத்துவோருக்கு இடையூறு விளைவிப்பதாகக் கருத்துக்களத்தில் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

நடைபாதையில் பொருள்களைக் குவித்து இடையூறு விளைவித்த உன் அண்டைவீட்டுக்காரருக்கு நீ எவ்வாறு அறிவுறுத்தினாய் என்பதையும் இத்தகைய பொறுப்பற்ற செயல்களைத் தடுக்க அண்டைவீட்டார் எவ்வாறு ஒன்றிணைந்து செயற்படலாம் என்பதையும் குறித்து உன் கருத்துகளை எழுதவும். கீழ்க்காணும் மூவரின் கருத்துகளைக் கருத்திற்கொண்டு உன் கருத்துகளை எழுதவும்.

**இடையூறு அற்ற நடைபாதைகள்!**

தலைப்புகள்

உறுப்பினர் எண்ணிக்கை

[குமரன்] 5-11-2024: 8.00 AM

[டேவிட்] 28-10-2024: 5:30 PM
நான் சமூக சேவையில் ஈடுபட்டபோது முதியவர் ஒருவரது வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவர் நிறைய அட்டைப்பெட்டிகளையும் பழைய மின்னியல் சாதனங்களையும் தம் வீட்டுக்கு வெளியே வைத்திருந்தார். அப்பொருள்களை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்துமாறு நான் கேட்டுக்கொண்டதற்கு அவர் மறுத்துவிட்டார். நான் அதைப் பற்றிக் காவலரிடம் தெரிவிக்க எண்ணியுள்ளேன்.

[சைனூல்] 22-10-2024: 8:45 PM
என் உறவினர் தம் வீட்டுக்கு வெளியே பொருள்களைக் குவித்து வைப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார். அவற்றை அப்புறப்படுத்துமாறு என் தாயார் அவரிடம் கூறினார். ஆனால், அவர் தமது விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்று கோபத்துடன் கூறிவிட்டார். இப்படிப்பட்டவர்களை என்ன செய்வது?

[முகிலன்] 22-10-2024: 6:30 PM
என் அண்டைவீட்டுக்காரர் எங்கள் மாடியிலுள்ள மின்தூக்கித் தளத்தில் மேசை நாற்காலிகளை வைத்துள்ளார். அவை குடியிருப்பாளர்களுக்கு நல்லதொரு சூழலை ஏற்படுத்தியிருந்தாலும் அவை மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கலாம். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை!

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

## ‘ஆ’ பிரிவு (கட்டுரை)

**பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றுக்கு மட்டும் 300 சொற்களுக்குக் குறையாமல் விடை எழுதவும்.** (60 மதிப்பெண்கள்)

**3** உயர்ந்த பண்புடையோர் குறைவாகப் பேசி ஒரு செயலை நிறைவாகச் செய்து முடிப்பர் என்பதை உனக்கு உணர்த்திய ஒரு சம்பவத்தை விவரித்து எழுதவும்.

**4** உன் பள்ளி ஏற்பாடு செய்துள்ள பேச்சுப்போட்டியில் நீ கலந்துகொள்ளவிருக்கிறாய். ‘பொது இடங்களில் கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்துவதற்கு விதிமுறைகள் தேவை’ என்னும் தலைப்பில் சிற்றுரை எழுதவும்.

**5** இன்றைய இளைஞர்கள் தம் பண்பாட்டைப் பின்பற்றத் தயங்குகின்றனர். விவாதிக்கவும்.

முற்றும்

*Copyright Acknowledgements:*

The Singapore Examinations and Assessment Board has made every effort to trace copyright holders, but if we have inadvertently overlooked any, we will be pleased to make the necessary arrangements at the first opportunity.